1 ஆம். இல்லை. தெரியாது. புரியவில்லை.

2 உங்கள் பெயரென்ன? அதை ஆங்கிலத்தில் எழுத முடியுமா?

3 தயவு செய்து உங்கள் விலாசத்தை எழுதுங்கள்.

4 உங்கள் வயதென்ன?

5 உங்களைப் பற்றித் தொடர்பு கொள்ள வேண்டியவரின் பெயர், தொலைபேசி அல்லது விலாசத்தைத் தரவும்.

6 தங்களைப் பரிசோதிக்கப் போவது [1]மருத்துவர். [2]செவிலி.

7 உங்களுக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டதா? எப்போது? (அதை காலண்டரிலும் கடிகாரத்திலும் காட்டவும்.)

8 நீங்கள் நினைவு தவறினீர்களா?

9 எப்போது சுகயீனம் ஏற்பட்டது? (அதை காலண்டரிலும் கடிகாரத்திலும் காட்டவும்.)

10 உங்களுக்கு ஏதாவது நோவு உண்டா? எங்கேயென்று சுட்டிக் காட்டவும். நோவு எப்போது தொடங்கியது? (அதை காலண்டரிலும் கடிகாரத்திலும் காட்டவும்.)

11 உங்கள் வலியின் அளவு என்ன? 1 (வலி இல்லை) 2 3 4 5 6 7 8 9 10 (கடுமையான வலி)

12 நோவு தொடர்ச்சியாக உள்ளதா? அல்லது வந்து போய்க்கொண்டிருக்கிறதா?

13 இரத்தப்போக்கு ஏதும் இருந்ததா? எங்கேயென்று சுட்டிக்காட்டவும்.

14 இருமல் உண்டா? இருமும்போது ஏதும் வெளியே வருகிறதா? என்ன நிறம்? வெள்ளை? மஞ்சள்-பச்சை? சிவப்பு? மண் நிறம்?

15 மூச்செடுக்கக் கஷ்டமாயிருக்கிறதா?

16 வாந்தி (சத்தி) எடுத்தீர்களா? நீங்கள் ரத்த வாந்தி எடுத்தீர்களா?

17 வயிற்றோட்டம் உண்டா?

18 மலச்சிக்கல் உண்டா?

19 உங்கள் மலத்தின் நிறம் கடுமையாக இருந்ததா?

20 கணுக்கால் வீங்குவதுண்டா?

21 உங்கள் எடை குறைந்துள்ளதா?

22 தங்களின் சிரமம் [1]பார்ப்பதில்? [2]கேட்பதில்? [3]விழுங்குவதில்? [4]நடப்பதில்?

23 அறுவை சிகிச்சை ஏதாவது செய்ததுண்டா? எவ்விடத்திலென்று சுட்டிக்காட்டவும்.

24 உங்களுக்கு கடைசியாக மாதவிடாய் தொடங்கியது எப்போது? (காலண்டரில் காட்டவும்)
நீங்கள் கர்ப்பமாய் இருக்கிறீர்களா? எத்தனை மாத கர்ப்பம்?
நீங்கள் கருவுற்றிருக்கும் சாத்தியம் உள்ளதா? கர்ப்பப் பரிசோதனை செய்யலாமா?

25 நீங்கள் புகைப்பிடிப்பதுண்டா? ஒரு நாளைக்கு எத்தனை சிகரெட்டுகள்.

26 உங்களுக்கு உள்ள நோய் [1]சர்க்கரை வியாதி? [2]வலிப்பு நோய்? [3]மூச்சிரைப்பு நோய்?

27 உங்களுக்கு எப்போதாவது [1]இருதயக் கோளாறு [2]இருதய அடைப்பு [3]அதிக இரத்த அழுத்தம் [4]மாரடைப்பு [5]செயலிழப்பு [6]மஞ்சள் காமாலை [7]கல்லீரல் நோய் வந்ததுண்டா?

28 ஏதாவது மருந்துகள் உங்களுக்கு ஒத்துக் கொள்ளாதா? பெனிசிலின்? ஆஸ்பிரின்? அல்லது வேறு ஏதாவது மருந்துகள்?

29 இப்போது ஏதாவது மருந்துகள் பாவிக்கிறீர்களா? மருந்துகள் ஏதாவது வைத்திருக்கிறீர்களா?
நீங்கள் வேறு ஏதேனும் மருந்து அல்லது இயற்கை வைத்தியம் எடுத்துக் கொள்கிறீர்களா?

30 நீங்கள் எத்தனை மாத்திரைகள் உட்கொண்டீர்கள்?

31 நீங்கள் தவறாமல் ரனஜன்னிக்குத் தடுப்பூசி எடுத்துக்கொள்கிறீர்களா?

32 சமீபத்தில் இங்கிலாந்தைத் தவிர வேறு நாட்டிற்குச் சென்றீர்களா? எந்த நாட்டிற்கு? எப்பொழுது?

33 நான் ஒரு: [1]செவிலி. [2]மருத்துவர். [3]முதல் உதவியாளர். [4]தனிப் பயிற்சிப் பெற்றவர். [5]சமூக சேவகர்.

34 நான் தங்களைப் பரிசோதிக்கலாமா? [1]தங்களுக்கு ஒரு ஆண் பரிசோதிப்பதில் ஏதேனும் ஆட்சேபம் உள்ளதா? [2]பெண் பரிசோதிப்பதில்?

35 மன்னிக்கவும், இது தங்களைப் பாதிக்கலாம்.

36 பின்வருவனவற்றை நான் செய்ய வேண்டும்.

37 தங்களின் மார்பில் காது வைத்துக் கேட்க வேண்டும்.

38 தங்களின் இதயத்தை பரிசோதிக்க வேண்டும்.

39 உள் பரிசோதனை.

40 ஊசி போட வேண்டும்.

41 இந்தக் குழாயை செலுத்த வேண்டும்.

42 இரத்த பரிசோதனைக்கு கொஞ்சம் இரத்தம் எடுக்க வேண்டும்.

43 தங்களை எக்ஸ்ரே எடுக்க வேண்டும்.

44 தையல் போட வேண்டும். நீங்கள் மருத்துவரிடம் தையல் பிரிப்பதற்காக இந்தத் தேதியில் செல்ல வேண்டும் (அதை காலண்டரிலும் கடிகாரத்திலும் காட்டவும்)

45 தங்களுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது: [1]காலில். [2]கணுக்காலில். [3]கையில். [4]மணிக்கட்டில். [5]தோல் பட்டையில்.

46 தங்களுக்கு மாவு கட்டு போட வேண்டிய இடம்: [1]கால். [2]கணுக்கால். [3]கை. [4]மணிக்கட்டு.

47 நீங்கள் இதை (சுட்டி காட்டி) இந்தத் தேதி வரை வைத்திருக்க வேண்டும் (காலண்டரைக் காட்டவும்.)

48 இந்தப் பாத்திரத்தில் சிறுநீர் கழிக்கவும்.

49 எதுவும் சாப்பிடவோ, குடிக்கவோ வேண்டாம்.

50 இப்போது நீங்கள் எழும்பலாம்.

51 நீங்கள் வைத்திய சாலையில் தங்கியிருக்க வேண்டும்.
தயவுசெய்து வார்டில் படுக்கை கிடைக்கும்வரை காத்திருக்கவும்.

52 எல்லாம் சரியாகிவிடும். பயப்படவேண்டாம்.

53 நான் ஒரு டாக்ஸி கூப்பிடட்டுமா?

54 உதவி தேவைப்பட்டால் இதைப் பாவிக்கவும்.

55 தயவுசெய்து காத்திருக்கவும். தயவுசெய்து இந்த வழியாக வரவும். நீங்கள் வீட்டிற்குப் போகலாம்.

56 தயவு செய்து ஏதாவது பிரச்சினை என்றால் திரும்பி வரவும்.

57 நான் அதை உங்களுக்குத் திரும்பச் சொல்கிறேன்...

## நோயாளியின் கேள்விகள்

58 நான் எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டும்?
1 மணி நேரம் வரை 2 மணி நேரம் வரை 3 மணி நேரம் வரை 4 மணி நேரம் வரை

59 யாராவது என்னைப் பெயர் சொல்லி அழைப்பார்களா?

60 தொலைபேசி எங்கிருக்கிறது, நான் என் குடும்பத்தாரிடம் - நண்பரிடம் பேச வேண்டும்?

61 தயவு செய்து வீட்டுக்குப் போக ஒரு டாக்ஸி கூப்பிட முடியுமா?

62 எனக்கு எல்லாம் சரியாகிவிடுமா?